ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# ஆஞ்சனேயர்

# தோத்திரப்பதிகம்.



கோன்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

# விளம்பரம்.

இதனால் சகலருக்கும் அறிவிப்பது, சென்னை, சூளை,
போஸ்டைச்சேர்ந்த கானத்தியப்பமுதலி வீதி, 17-18வது நெ.
வீட்டில் ஸ்தாபித்திருக்கும் கோல்டன் அச்சுயந்திரசாலையில்
இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, ஸ்கூல்புத்தகங்களும்; அநேகவித
மருந்துகளும், விசித்ரமான ரப்பர் ஸ்டாம்புகளும் ரப்பர் எழுத்
துகளும், ஸ்டீரியோ பிலேட்டுகளும், ஜர்மன் சில்வர் நகைக
ளும், அத்தர் தினுசுகளும், டொப்பி தினுசுகளும், போஸ்
டெயார்டு அளவுள்ள விநோதமாகிய பொட்டகிராப் படங்களும்
தேவையானவர்கள் அரையணா லேபில் அனுப்பி தங்கள் விலா
சம் தெரிவித்தால் 2-அணா பெறும்படியான (2) கேட்லாக்
இனாமாக அனுப்பப்படும்.

தேவையானவர்கள் அடியிற்கண்டிருக்கும் கம்பெனி
யாரவர்களுக்கு எழுதிபெற்றுக் கொள்ளலாம்.

டி, கோபால் அண்டு கோ.

கோல்டன் பிரஸ், சூளை போஸ்டு, மதாரஸ்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# ஆஞ்சனேயர்

# தோத்திரப் பதிகம்.

காப்பு - நம்மாழ்வார் துதி.

நேரிசைவெண்பா.

கங்கைநீர் நாட்டினில்வாழ் காகுத்தன் றாதுவனைக்
கங்கைசேர்த் தேத்துங் கவிக்குதவுங்—கங்கையுறு
மாறன் றெருளிரு மணித்தடஞ்சூழ் வண்குருகை
மாறன் றிருத்தாண் மலர்.

திருமால் துதி.

கட்டளைக்கலித்துறை.

நேயம்புரிய வருமாஞ்சனேய நிமலனுற
மாயம்புரியு நிருத்தத்தறுகண் மதகயங்கொல்
சேயம்புரியத் தமிழ்ப்பதிகத்துதி செப்புதற்குப்
பாயம்புரியகைக் கோதண்டராமன் பதந்துணையே.

## நூல்.

### ஆசிரிய விருத்தம்.

நீர்கொண்ட கார்கொண்ட கொண்டலர விந்தமலர் நிகர்கொண்ட மேனிகொண்ட, நித்தவுயர் தத்வகுண சத்வபர வஸ்துவெனு நெடியமா லருணெறியினல், சீர் கொண்ட சண்டவிக லரியினது சேயெனத் திகழரியின் வருமண்ணலே, செம்பொன்னுல கம்புவிய ராதியர்க் காதார இடநிலய மானபொருளே, ஏர்கொண்ட வைம் பெரும் பூதமென்றுருவி யைக்கிறல் கொண்டமுதலே, இகலுமெய்ஞ் ஞானவிரு ளொழியவெங் கெங்குமொளி யிலகவெழு கின்றசுடரே, ஆர்கொண்ட நின்மகிமை புக ல்வதர்க் கியாவர்தா மரியவரி டத்திலன்பாய், ஆஞ்சமய முன்னின்று சாஞ்சலிய நீத்தருளும் ஆஞ்சனேயக் கட வுளே. (க)

படியினெடு முடிகொள்வரை கிடுகிடென நெடிய கடல் பாயநீ டிருவடிகளும், பாசமென நீசருயிர் நாச முற வீசியெப் பாலுமே கோலும்வாலும் கொடியிரத முரிபடக் கரிபடப் பரிபடக் குவிபடக் கொன்ற கரமும், கொற்றியொடு வெற்றியுறை வுற்றழகு பெற்றவுயர் குன்றமென நின்றபுயமும், விடியல்வரு மண்டல மிரண் டனைய குண்டலம் விளங்கெழி லலங்கொள் செவியும், மிகுகருணை தகுநயன முகிழ்நகைகொள் முகவனச மே ன்மையுங் கண்டெளியனேன், அடிமைசெய வரமுதவ

வந்தருள்வ தென்றரோ வடியவ ரிடத்திலன்பாய், ஆஞ்சமய முன்னின்று சாஞ்சலிய நீத்தருளு மாஞ்சனேயக் கடவுளே. (உ)

மேருமந் தரமாதி வரையெலா நின்பாத விரலினினெறுக்கி விடுவாய், விரிதிரைக் கடனீரை யேற்றுவாய் பக்கலின் மிதித்துநற் றிடர்செய்குவாய், பேருமொளியிடிகளொடு மேகக் குழாத்தைப் பிடித்துப் பிழிந்தெடுப்பாய், பிரமன்செ யண்டங்கண் மெத்தென்ற பந்தாய்ப் பிறங்கிட வெறிந்தாடுவாய், ஒருயுகம் முடிவில் வருவடவனலை வாயினலூதித் தணித்தழிப்பாய், உரோமராசியில்வர்ன சோதிகளெ லாந்தோற்ற வோங்குவாய் நினதுவன்மை, ஆருமுணர் வரிததனை யடியனென் சொல்லுகே னடியவ ரிடத்திலன்பாய், ஆஞ்சமய முன்னின்று சாஞ்சலிய நீத்தருளு மாஞ்சனே யக்கடவுளே (ங)

சிறுமதலை யானபொழு துண்ணுநற் கனியென்று செங்கதிரின் மேற்பாய்ந்தனை, செப்புமவ னிரதத்தின் முன்புபின் னடைகொண்டு சென்றைந் திரங்கற்றனை, மறுவிலாவதிகார கோதண்ட ரகுநாத வள்ளலருள் வழிநின்றனை, வாரிதியை யங்கார தாரைகுடா கொடுதாவி வளர்பவள வரையுற்றனை, தறுகண ரிலங்கையிற் காவல் செய்வாளைத் தரைப்பட வரைந்தேகினை, ஜானகிக்காழியை யளித்தஞ்ச லஞ்சலெந் தாயென்று துயர்தீர்த்தனை, அறிவில் லாமையைப் பெருதியென வுற்றுளா யடிய

வரிடத்திலன்பாய், ஆஞ்சமய முன்னின்று சாஞ்சலிய நீத்தருளு மாஞ்சனே யக்கடவுளே. (௪)

ஈரைந்து சிரமஃ திரட்டிவன் கரனுமி ராவணன் சோகவனமோர், இமையினிற் றுகள்படுத் தெண்டிசை குலுங்கவே யிகல்வீர கர்ச்சனைசெய்தே, சாரைந்து மூன்றாயுத கிங்கரரை வெங்கணெறி தருசம்பு மாலிதன் னைத், தளகர்த்த ரைவரொடு களமுற்ற விருதலைத் தா ளான் மிதித்துழக்கிக், கூரைங் துகிர்க்கரங் கொடுபீறி யெற்றியுடல் கூறுகூ றுய்க்கிழித்துக், குழப்பிக் கலக்கி யவ் வரக்கனைத தேய்த்தாவி வெள்ளைபட விளையாடியே, ஆரைந்து சுதனடி யுற்றுமயல் கெற்றனை யடியவ ரிட த்திலன்பாய், ஆஞ்சமயமுன்னின் றுசாஞ்சலியநீத்தருளு மாஞ்சனே யக்கடவுளே. (௫)

மாபாவி யாமிந்த்ர சித்துமுன் வஞ்சமாய் மலர்மக ன் பகழியேவ, வளர்விஜய கோதண்ட வள்ளல்தம்பியும் வாலி தம்பியும் ம்ணுமுரணிற், சாயாத வானரர்கள் யாவருஞ் சீவனிலே தவறிச்ச மர்க்களத்தில், சண்டமா ருதமோத வீழ்மாம ரங்கள்போற் சாய்வுற் றிருந்தபோ தும், வீயாமல் வீடணன் விலக்குற விலக்குவன் வேலே ற்று வீழ்ந்தபோதும், வேரோடு சஞ்சீவி மலையினைக் கொடுவந்த வீரநின் விஜயதீரம், ஆபாத மதியினேன் உரைசெயுந் தகையிதோ வடியவ ரிடத்திலன்பாய், ஆஞ் சமய முன்னின்று சாஞ்சலிய நீத்தருளு மாஞ்சனேயக் கடவுளே. (௬)

இமையவர்க ளுகர்முறை கேட்குநின் செவிகளுக்
கெனதுமுறை கேட்கவில்லையோ, இன்னநீர்த் தளவிலா
நன்மைதந் தாள்கருணை யெளியனேன் மீதில்லையோ,
நிமையளவ தன்றிமிகு நேரமோவென்னிலே நினக்குவெ
குதூரமாமோ, நீமனது வைத்திடற் சாமியென் றுயரெ
லாம் நீக்குவது மொருபாரமோ, சமயமிதில் வாராத
தாமதமு மென்கொலோ தக்கதுணை வேறுமுளதோ,
தமியன்மேல் வர்மமோ விதுநினது தர்மமோ தடையா
னதென் கர்மமோ, அமைவறிகி லேன்விரைவில் வந்து
தவி செய்குவா யடியவ ரிடத்திலன்பாய், ஆஞ்சமய முன்
னின்று சாஞ்சலிய நீத்தருளு மாஞ்சனே யக்கடவுளே.

பெற்றதாய் தந்தைநீ சுற்றமொடு நம்பிநீ பேரருட்
குருவுநீயே, பேதமில் லாதுதவு கல்விநீ நெறியினிற்
பிரியாத போதநீயே, நற்றவமு நீமிக்க வரமுநீ யுரமுநீ
நான்பெருஞ் செல்வநீயே, நாதனீ யாதலா லேதிலார்
போல்விடுத னல்லருளி னுக்குரியதோ, குற்றங்கள் பல
செய்தத் துட்டனு கினுமடிமை கொண்டபின் விடலாகு
மோ, குறைகொண் டிறந்திடிற் பொறைகொள்வ தன்றி
யே கோபங்கொள் வாருமுண்டோ, அற்றமிதில் வந்து
தவிவாயையனே யடியவரிடத்திலன்பாய், ஆஞ்சமயமுன்
னின்று சாஞ்சலியநீத்தருளு மாஞ்சனேயக்கடவுளே. ()

வாதமுதன் முப்பிணியில் விளையுமெய் பிணியுநினை
மனதினி னினைக்குமுன்னே, வந்தவழி தெரியாம லோடு

மேபொல்லாத வஞ்சனை வகுத்தபில்லி, ஏதமுறு சூனிய முதலானகர்மங்கள் யாவையும் நீராகுமே, இருளனொடு முனிகறுப் படல்வீரன்மாடனு மிடாகினியு மாகாளியும், பூதவேதாளவிற லேமனுட னவலேவல் புரிகின்ற கால படரும் பொய்யாத நின்பெய ருரைத்திடி னடுங்கிவாய் பொத்தியே யோடிவிடுவார், ஆதலா னின்பெருமை யறி வதற் கெளியதோ வடியவ ரிடத்திலன்பாய், ஆஞ்சமய முன்னின்று சாஞ்சலிய நீத்தருளு மாஞ்சனே யக்கட வுளே. (கூ)


நின்னருள் படைத்தவர்க் கென்னகுறை யளகேச னிகரான வாழ்வுபெறுவார், நீள்பொதிய மாமலையின் மாதவவகத்தியனை நேர்சொலுங் கல்விபெருவார், மன்ன வர்க்கரசரா யுயர்புகழு நிறைவான வாழ்நாளு முடைய ராவார், மாதருடன் மக்கள்கிளை யாலறுகு போலவே வளர்வுறப் பெற்றிருப்பார், இன்னலெனு மொழிசெவியு றாமலே சுகமகிழ்வில் யாவரொடும் வீற்றிருப்பார், இம் மையினு மம்மையினு மேதகைய ராவரெனி லெளிய னின்னை விட்டகல்வனோ, அன்னைநிலை யானுமே பெறவரு ள்க வண்ணலே யடியவ ரிடத்திலன்பாய், ஆஞ்சமய முன்னின்று சாஞ்சலிய நீத்தருளும் ஆஞ்சனே யக் கடவுளே. (கo)

ஆஞ்சனேயர் தோத்திரப்பதிகம் - முற்றிற்று.

ஸ்ரீராமர் சகாயம்.

ஸ்ரீ

ஸ்ரீ ராமஜெயம்.



# திருவல்லிக்கேணி,

# பார்த்தசாரதிபெருமாள்பேரில்

## ஆசிரியவிருத்தம்.

ஆதியாய் நின்றதோ ரண்ணலே கண்ணனே யண்டர்கட் கமுதளித்தாய், ஆனந்த கோவிந்த மாதவா துளவமல ரணிகேச வாமுகுந்தா, நீதியாய் நின்றதா சர்க்குவரமீந்திடும் நிட்களா பதுமநாபா, நீலவண்ணஹரி வைகுந்தவாசனே நிறைந்தகல் யாணலீல, சோதியே யமரர் துதி செய்திடும்பாதனே துய்யனே பரந்தாமனே, சுத்தனேகர்த்தனே பத்தர்கண்மனதினிற் றுலங்கிடு மாதிமூர்த்தி, பாராதி மதிதனை யணியும்பல மனுகூலனே பகர் திருவல் லிக்கேணிவாழ், பங்கயக் கண்ணருக் மணிதேவிநேயனே பார்த்தசா ரதிமாயனே. (க)

மச்சியா கூருமா வராகநரசிங்கமா வாமனு பரசுரா
மா, மங்கையாஞ் சீதையிட தங்கரகுராம பலகிருஷ்ணு
கற்கியே, வச்சிரகோ தண்டமணி கையனே திய்யனே
மாவலியை சிறையில்வைத்த, மாதவா பலகோடி சூரிய
ப்பிரகாசனே மகாவசுரர் குலமறுத்தாய், தத்சொரூபமா
கி வந்தானைககாத்தவா சங்குசக் கரமேந்திடும், தற்பரா
கோவர்த்தன கிரியேந்தி யாயரொடு சகலபசு நிறைகள்
காத்தாய், பச்சையா லீலையின் மேற்றுயில் கொண்டவா
மறைகள் பகர் திருவல்லிக்கேணி வாழ், பங்கயக் கண்ணு
ருக் மணிதேவிநேயனே பார்த்தசாரதி மாயனே. (உ)

எட்டென் றிரண்டென்று மறியாத சிறியனே
னென்னபிழை செய்தாலுநீ, எல்லாம் பொறுத்துநின்
கருணைகூர்ந் தடியேனை யாளுவா யேழைபங்கா, வட்ட
வாரியுலகி லுனையன்றி வேறுதவி மதுசூதனு வறிகி
லேன், வாசுதே வானந்த கோபால மைந்தனே மன்மத
னையீன்றஜோதி, துஷ்டநிக் கிரகனே சிஷ்டபரிபாலனே
துணையாக நின்றபொருளே, தொண்டர்கள் பணிந்திடு
மூலாசனே தசரதன் திய்யமக னுயயோத்திப், பட்டந்
தரித்துலகை யாண்டிடும் பரமனே பகர்திருவல் லிக்கே
ணிவாழ், பங்கயக் கண்ணுருக் மணிதேவி நேயனே பா
ர்த்தசா ரதிமாயனே. (௩)

தீரனுந் தசரதன் வயிற்றிற் பிறந்துபின் சீதையை
மணம்புணர்ந்து, சீராமயோத்தியில் வந்துதாய் சொற்ப
டித் தண்டகா ரணியமேவி, சார்வான முனிவருக் கபய

வஸ்தமதீந்து சதிவாலி தனைவதைத்துத், தஷணஞ் சுக்ரீவ னுக்கரசுதந்துபின் சாகரத் தணைகட்டியே, போராத கொடுமையுமி ராவணனை யும்படை களைமாள வேராறுத்துப், பெருவிபீ ஷணனுக்கு லங்கைகந்தேமலர் பெண்ணுட னயோத்திவந்து, பார்தன்னை முடிசூடி யாண்ட ஸ்ரீராமனே பகர்திருவல் லிக்கேணிவாழ், பங்கயக் கண்ணுருக் மணிதேவி நேயனே பார்த்தசாரதி மாயனே. ()

முத்துநவ ரத்னமணி வைத்திழைத்த கிரீடமுடி மீது ஜோதிமின்ன, முழுமதி முகத்தினிற் றிருநாமமின்னவே முன்கையிற் சங்கமின்ன, சுத்ததிரு மேனியில் வச்ரக் கபாயிெனுடு துலங்குமா ரங்கண்மின்னத், துளபமாலைகளொடு பதக்கங்கள் மின்னவிரு தோளில்புஜகீர்த்திமின்ன, சத்தசா கரவுலகும் வைத்தவயி ரதன்மீது சகஸ்த்ரதள மாலைமின்னத், தஞ்சமென் றோர்களுக் கஞ்சலெனவந்தருள் சக்ரகர மெய்ப்ரதாபா, பத்தர்கள்பணின்ற பதமல ரெனக்குநீர் பகர்திருவல் லிக்கேணிவாழ், பங்கயக் கண்ணுருக் மணிதேவி நேயனே பார்த்தசாரதி மாயனே (ரு)

அன்னங்கள் போன்மாத ராடலும்பாடலு மனேக வித வாத்யங்களும், அண்டர்கள் செவிடுபட தேவகோஷ்டங்களும் அடியார்க டொழுதேத்தலும், சின்னங்கள் பூத்தபோ லேணிப்பந் தங்களுந் தினுசுதினு சாம்பந்தமும், சித்ரபாணங்களும் புருசுமுதல் வெடிகளுஞ் சிறக்கமத் தாப்பிலங்க, உன்னதக கவரிவா ளாலவட்டங்கு

டைக ளொளிர்மதி யெனப்பிடிக்க, ஓங்குகரு டாதியர் மேற்பவனி வந்திடு முல்லாச மென்னசொல்வேன், பன் னுதமி ழாழ்வார்கள் பன்னிருவர் பாடலும் பகர்திருவ ல்லிக்கேணிவாழ், பங்கயக் கண்ணுருக் மணிதேவிநேய னே பார்த்தசா ரதிமாயனே. (சு)

கல்லாகி லுங்கரையு மெனதுமன முன்றன்மேற் கரையா திருந்ததென்னோ, கபடமோ வஞ்சனைக் காரண மறிதோவெனைக் காக்கவுங் கடமையிலையோ, பொல்லாத வறிய னேயெனைச் சூழ்ந்துமேற் பேராடு தென்னசெய் வேன், போற்றினே னெனதுகலி தீர்த்தாண்டுகொளல் வேண்டும் புருஷோத்த மாஙிசங்காண், சல்லாபமாகவே சகலசௌ பாக்கியமுந் தந்திடுந் தருமமூர்த்தி, சாலோக சாமீப சாரூபசாயுச்ய தற்பரா வுன்னையானும், பல்லா ண்டு பல்லாண்டு பல்லாண்டு பாடினேன் பகர்திருவல்லி க்கேணிவாழ், பங்கயக் கண்ணுருக் மணிதேவி நேயனே பார்த்தசா ரதிமாயனே. (எ)

தஞ்சமென் றுன்பாதம் நெஞ்சில்வைத் திடுமெனை ச் சற்றுமருள் செய்யாதநீ, தருமமோ வதுவுமென் கருமமோ விப்படித் தவிக்கவிடு வதுநீதியோ, வஞ்சனைக னோவுனது நெஞ்சிரங் காததோ மதியிலேன் சதியுமிது வோ, மைந்தனைப் பெறறோர் வளர்த்திடுவ தில்லையோ வாதுநான் செய்யலாமோ, கஞ்சனை யுதைத்து காளியன் மேனடித்தவெங் காரணபாரளந்த, கண்ணனே வண்ண னே பன்னகச் சயனனே காயாவின் மலர்வண்ணனே

பஞ்சவர்தமக்குதவு பாரதமுடித்தபின் பகர்திரு வல்லிக்
கேணிவாழ், பங்கயக் கண்ணுருக் மணிதேவி நேயனே
பார்த்தசா ரதிமாயனே. (அ)

தேவதேவாநமோ நாராயணு சகல ஜெகநிவா சா
பொன்னிசூழ், ஸ்ரீரங்கதாமனே சாரங்கவாமனே செல்
வாச ஞர்த்தனவெனக், கூவினே னுன துதிரு நாமகீர்த்
தனமெலாங் கொண்டுநின் பாதகமலக், குற்றேவல் செய
வெனது கொடுவினை களைந்துநின் குளிர்நோக்கி யென்னை
யாள்வாய், தாவில்சீர்த் தூணத்திற் றோன்றுமரி மூர்த்
தியே தருணமிது தருணமிதுவே, சச்சிதா னந்தனே
மெச்சுகோ விந்தனே சாயுச்சிய வைகுந்தனே, பாவலர்
கள் பாடலுட னடியார்முன் றோன்றுவாய் பகர்திருவல்
லிக்கேணிவாழ், பங்கயக் கண்ணுருக் மணிதேவி நேய
னே பார்த்தசா ரதிமாயனே. (கூ)

தந்தைநீதாயுநீ சகலமுந்தந்திடுஞ் சற்குருவுநீ மன
முநீ, சகவுறவுமுறையுநீ சாதனப்பொருளுநீசத்துவமு
நீபத்திநீ, எந்தன்மீதிறங்கிரட் சிக்குமெய்க்கடவுநீ எமது
குலதெய்வமும்நீ, எப்பொருளுநீமோக்ஷ காரணனுநீயப
னே யென்னையீன் றிடும்பரமுநீ, சுந்தரச்சீவநீ மன்னுநீவி
ண்ணுநீ சுகதுக்க கருமமும்நீ, சுபமுநீயசுபநீ சோதிநீபு
னலுநீ சொற்பகப்பொருளும்நீயே, பைந்தமிழ்ப்பத்தரா
ன்பாடியதுநினதருள்பகர்திருவலிக்கேணிவாழ், பங்கயக்
கண்ணுருக்மணிதேவிநேயனேபார்த்தசாரதிமாயனே.()

பார்த்தசாரதி ஆசிரியவிருத்தம் - முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

பார்த்தசாரதி பெருமாள்பேரில்

# பஞ்சரத்தினம்.

---

கண்டம்பா தரைக்கணந் தரியாதெ முந்துமுன் லைகுவித் தெதிர்சென்றுடல், கம்பித்துரோமஞ் சிலிர த்துவிழி மலரருவி கரைபுரள முகமலர்ந்தே, தெண்ட னிட்டுபசார மாவாரழைத்தவர்கள் சிந்தையில் நினைந்த படியே, செப்புமுன் னடியவர்க் கொப்புள னடித்தவர் கள் செல்வமொரு குறைவுமுண்டோ, தண்டமொடு சங்குசக் கரம்வாளி லங்குகோ தண்டமேந் திடும்பிரச ண்ட, தகைகொண்ட பகவண்ட முழுதுண்ட தளமளவ கண்டவண்டா, பண்டரு மனந்தமறை கொண்டுமுனி வோர்கடுதி பகர்திருவ லிக்கேணியிற், பார்த்தபே ரிட மாய மூர்த்தமாகிய தூய பார்த்தசா ரதிமாயனே. (க)

உனதுபஞ்சாயுதத் தொருபடைநினைத்தவர்களோ ன்னலர் படைக்குவருவார், ஒளிகவுத்துவமணியி னைக்க ருதுமவர்கள்கடு வுலகநிந்தையு ளழுந்தார், பனகத்தின் வயிரியைக் காணுமவர் தனகனமகிழ் பதியுமவர்நிதியுமதி யார், பங்கயப்பதமனந் தங்கவைத் தவர்பெருமை பகர வெளிதாகுமோதான், கனகனெனவருமவுண னுடறடிந் திடுமதி கெம்பீரநாரசிங்க, கனபிங்களசுபங்க சுவிதங்க மதிரங்க கருதுமக ளங்கதுங்கா, பனசமாகதலிமுக் கனி

நறவு பாய்பனைகள் பயிதிருவல் லிக்கேணியிற், பார்த்தபே ரிடமாய மூர்த்தமா கியதூய பார்த்தசா ரதிமாயனே. (உ)

மனுநீதி கொண்டதச ரதனுறும் புதல்வனென வந்தறிஞா மகமுடித்து, வடிவகலி கைக்கருளி யொடியவில் வளைத்துமலர் மகளையு மணந்தடவியில், தனுவோ டெதிர்த்தகர தூஷணர் மடிந்தபின் றகைமாய மான்கடிந்து, கனியர சியற்கைசுக் ரீவனுக்குதவி பின்றடங்கட லடைத்திலங்கை, தனுமிரா வணனுதி மடிபவீ டணனுமுடி சூட்டிமகிழ் கொண்டராமா, சுகபூமா திகழ்வாமா குணதாமா டலராமா சோமவா னந்தநாமா, பன்னுநான் மறைத்தெளிவ தாகுமாழ் வார்கடுதி பகர்திருவ லிக்கேணியிற், பார்த்தபேரிடமாய மூர்த்தமா கியதூய பார்த்தசா ரதிமாயனே. (ங)

நல்லவசு தேவன்மா மனையுதித் தாயார் கோகந்தனிட மாய்வளர்ந்து, நஞ்சுமுலை வழியினொரு பெண்பேயினுயிருண்டு நமனைநகர் சகடுதைத்துக், கல்லுரலினொடு சென்னு மருதிருத் தளைதின்று கனகுருகு வாய்பிளந்து, காளியன் மேனடித் தானிரை புரந்தண்டர் காணவெகு லீலைசெய்து, மல்லரையும் வஞ்சமுறு கஞ்சனையும் வென்றுலகம் வாழவரு டந்தபோதா, மமநாதா நவநீதா சதுர்வேதா திருநாதா மகிதல மளந்தபாதா, பல்லவமு

யிர்த்தலைவை ருவலகை நிகர்வளம் பகர்திருவ லிக்கேணி யிற், பார்த்தபே ரிடமாய மூர்த்தமா கிய தூய பார்த்த சா ரதிமாயனே. (ச)

தீங்கொன் றிலாதபஞ் சவராசி லேறவுஞ் சுயோக ஞதியர் நீறவும், செருமுகத் தனில்விசைய னமரர்பெரு ந்தேரிலொரு செங்கையிற் கோலொன்று கொண், டேங் கிமலர் வாயாலு மாக்கடும்பரிகளை யுரப்புகோ லத்தைய டியேன், உளமகிழ்ந் தன்போடு காணவிங் கருளுவாய் உயர்தொண்டை மானினதுபோற், பூங்கழல் வணங்கிய பின் னுல்வேத மும்பரவு புனிதரகு ராமச்சந்த்ர, புஜா ந்த்ர கஜவிந்த்ரா பஜமந்த்ரா போற்றுமடியார் சுதந்த்ரா, பாங்குமுத் திடுசங்க வெவனவன் வழித்திடப் பணிதிரு வலிக்கேணியிற், பாாத்தபே ரிடமாய மூர்த்தமாகிய தூய பார்த்தசா ரதிமாயனே (ரு)

பார்த்தசாரதி பஞ்சரத்தின

முற்றிற்று.

---